## பாடம் - 2
## அனுமதிக்கப்பட்ட உணவு இருவகைகள்

## الدرس الثاني
## الأطعمة المباحة على نوعين

அனுமதிக்கப்பட்ட உணவுகளில் பிராணிகள், தாவரங்கள் என இரு வகை உள்ளன. தாவரங்களில் கெடுதியில்லாதவை ஹலாலாகும். பிராணிகளில் கடலில் வாழக்கூடியவை, தரையில் வாழக்கூடியவை என இருவகை உள்ளன. கடலில் வாழக்கூடியவையனைத்தும் பொதுவாக ஹலாலாகும். அவற்றை அறுக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. காரணம் கடல்வாழ்ப் பிராணிகளில் செத்தவைகளே ஆகுமானவையாக உள்ளன!

தரையில் வாழக்கூடிய பிராணிகளில் இஸ்லாம் ஹராமாக்கியவற்றைத் தவிர ஏனைய அனைத்தும் ஹலாலாகும். அவை: 1. நாட்டுக் கழுதை. 2. கழுதைப்புலி நீங்கலாக கீறிக்கிழிக்கக்கூடிய பற்கள் உள்ளவை.

பறவைகளில் வேட்டையாடக்கூடிய நகங்கள் உள்ளவை நீங்கலாக அனைத்தும் அனுமதிக்கப்பட்டவையாகும்.

عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ نَهَى رَسُولُ اللهِ ﷺ عَنْ كُلِّ ذِي نَابٍ مِنْ السِّبَاعِ وَعَنْ كُلِّ ذِي مِخْلَبٍ مِنْ الطَّيْرِ (م١٩٣٤)

விலங்குகளில் கீறிக்கிழிக்கக்கூடிய பற்கள் உள்ளவற்றையும் பறவைகளில் வேட்டையாடக்கூடிய நகங்கள் உள்ளவற்றையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளதாக இப்னுஅப்பாஸ்(ரலி)அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்-1934)

பறைவைகளில் பிணம் தின்னக்கூடியவை ஹராமாகும். கழுகு, பருந்து, காகம் போன்று. ஏனெனில் இவை அசுத்தமானவற்றைத்தின்கின்றன. (மட்டுமல்ல இவைகளுக்கும் வேட்டையாடும் நகங்கள் உள்ளன.) பாம்பு, எலி, புழு, பூச்சிகள் போன்ற அறுவருக்கத்தக்கவையும் ஹராமாகும்.

மேலே கூறப்பட்ட பிராணிகள், பறவைகள் தவிர அனைத்தும் ஹலாலாகும். உதாரணமாக குதிரை, ஆடு, மாடு, ஒட்டகம், கோழி, காட்டுக் கழுதை, மான், ஒட்டகச்சிவிங்கி, தீக்கோழி, முயல் இன்னும் இவை போன்றவை. இவற்றில் நஜீஸை - அசுத்தத்தை அதிகமாக உண்ணக்கூடியவை நீக்கப்பட்டுள்ளது. அவற்றை மூன்று நாட்கள் அடைத்து வைத்து சுத்தமானவற்றை உணவாகக் கொடுக்கப்படும் வரை உண்பது ஹராமாகும். பள்ளிவாசலுக்கு வரும்போது வெறுக்கத்தக்க வாடையுள்ள பூண்டு, வெயங்காயம் போன்றவற்றை உண்பது வெறுக்கத்தக்கதாகும். விலக்கப்பட்ட உணவை உண்ண வேண்டிய நிர்பந்தம் ஒருவனுக்கு ஏற்பட்டால் - அதை உண்ணவில்லையானால் செத்துப் போவான் என அஞ்சுவது போன்ற நிலைமை எனில், தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவு அதை உண்பது அவனுக்குக் கூடும். ஆனால் நஞ்சைத் தவிர!

ஒருவன் ஒரு தோட்டத்தைக் கடந்து செல்கிறான், அதன் கனிகள் மரத்தில் இருக்கின்றன அல்லது கீழே விழுந்து கிடக்கின்றன என்றால் அத்தோட்டத்திற்கு மதில் சுவரும், காவலாளியும் இல்லை என்றால் அதிலிருந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் எடுத்துச் செல்லக்கூடாது. ஆனால் மரத்தில் ஏறியோ அல்லது எதையாவது கொண்டு எறிந்தோ அல்லது சேகரித்து வைக்கப்பட்டதிலிருந்தோ நிர்ப்பந்தமின்றி உண்பது கூடாது. நிர்பந்த சூழ்நிலைக்கு விதிவிலக்கு உண்டு!